# தேவனாலே பராக்கிரமம் செய்வோம்.

# அவரே எங்கள் சத்துருக்களை மிதித்துப் போடுவார். சங்கீ 60 : 12

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நம்முடைய தேவனாலே . . . பராக்கிரமம் செய்வோம்.**

அடிக்கடி இந்த வார்த்தையை உபயோகியுங்கள்.

பவுலும், தீமோத்தேயும் பிலிப்பியருக்கு எழுதுகிறார்கள் **என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே . . .** பிலி. 4 : 14

அன்புக்குரியவர்களே,

எங்கள் தேவனாலே, அல்லது நம்முடைய தேவனாலே அல்லது கிறிஸ்துவினாலே... என்ற வார்த்தைக்கு முதலிடம் கொடுங்கள். ஏன் அப்படிச் செய்ய வேண்டும் ?

**சங். 48 : 14 கூறுகிறது,**

இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும், நம்முடைய தேவன், மரண பரியந்தம் நம்மை நடத்துவார்

ஆம், மரணபரியந்தம் நம்மை நடத்துகிறவர் கர்த்தர்... உலகத்தினர், உறவினர் ஒருசிலகாலம் நம்மை நடத்துவார்கள். ஆனால், நம்முடைய மரண பரியந்தம் நடத்துபவர் நம்முடைய தேவனே. இந்த தேவனாலே பராக்கிரமம் செய்வோம்.

**சங் 71 : 18 :** இப்பொழுதும் தேவனே, இந்த சந்ததிக்கு உமது வல்லமையையையும், வரப்போகிற யாவருக்கும், உமது பராக்கிரமத்தையும், நாம் அறிவிக்குமளவும், முதிர்வயதும் நரை மயிருமுள்ளவனாகும் வரைக்கும் என்னைக் கைவிடீராக .

நம்முடைய தேவனாலே பராக்கிரமம் செய்வோம், அவருடைய பராக்கிரமத்தை அறிவிப்போம். தேவனின் பராக்கிரமத்தை மக்களுக்கு அறிவியுங்கள். அப்பொழுது தேவனாலே பராக்கிரமம் செய்வீர்கள். தேவனே உங்கள் சத்துருக்களை மிதித்துப் போடுவார். அல்லேலூயா !

**சங்கீ. 91 : 13 கூறுகிறது.** சிங்கத்தின் மேலும், விரியன் பாம்பின் மேலும் நீ நடந்து பால சிங்கத்தையும் வலு சர்ப்பத்தையும் மிதித்துப் போடுவாய். – என்பதாக.

**ஆனால், சங்கீ. 60 : 12 கூறுகிறது :** அவரே எங்கள் சத்துருக்களை மிதித்துப் போடுவார் – என்பதாக. எத்தனை மகிழ்ச்சி. நாம் மிதித்தால் செத்தபினபும் வாலை ஆட்டிக் கொண்டிருக்கும். ஆனால், தேவன் மிதித்தால் "No More"

**ஆதலால்தான் வசனம் கூறுகிறது,**

தேவனே உங்கள் சத்துருக்களை மிதித்துப் போடுவார் – என்பதாக.

கடந்த நாட்களில் அநேக சிங்கங்களையும், விரியன் பாம்புகளையும் மேல் நீங்கள் நடந்தீர்கள். பால சிங்கத்தையும் வலு சர்ப்பத்தையும் மிதித்தீர்கள். ஆனால், இன்னும் வாலை ஆட்டிக் கொண்டே இருக்கிறது. உங்களை திணற வைக்கிறது. தடுமாற வைக்கிறது. நிலைகுலைய செய்கிறது. கண்ணீர் வடிக்கச் செய்கிறது. அலை மோதச் செய்கிறது. உள்ளம் உடையச் செய்கிறது.

ஆதலால் தான் இந்த ஆண்டு,

**தேவனே, உங்கள் சத்துருக்களை மிதித்துப் போடுவார்,**

**அப்படியானால் இன்று கண்ட எகிப்தியனை என்றுமே நீ காண்பதில்லை.** – அல்லேலூயா சொல்லுவோம்.

**சங்கீ. 3 : 1ன் படி** கர்த்தாவே என் சத்துருக்கள் எவ்வளவாய் பெருகியிருக்கிறார்கள். எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் அநேகர் என்று அங்கலாய்க்கும் சகோதரனே, சகோதரியே,

**மீகா 5 : 9 கூறுகிறது, உன்னுடைய கை உன் விரோதிகளின் மேல் உயரும். உன் சத்துருக்களெல்லாரும் சங்கரிக்கப்படுவார்கள் –** என்பதாக !

**பக்தன் பாடுகிறார்**

உனக்கு எதிராய் எழும்பும் ஆயுதம்<br>
வாய்த்திடாதே, என்றதாலே ஸ்தோத்திரம்<br>
பறந்திடுமே, உம் நாமத்திலே,<br>
பரனே எனக்காய் ஜெயக்கொடியே<br>
என்னை மறவா இயேசு நாதா,<br>
உந்தன் தயவால் என்னை நடத்தும் – ஆமென்.